புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜுன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# அறத்தின் குறியீடு செங்கோல்

முனைவர்.சு.இளமாறன்.,
உதவிப்பேராசிரியர், தமிழாய்வு மையம்,
இலக்குமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
நெய்யூர், கன்னியாகுமரி-629802.

## ஆய்வுச் சுருக்கம்

மன்னன் அறம் பேசுவதும் புலவர் அறம் பேசுவதும். குடிமக்கள் அறம் பேசுவதுமாக அடிக்கருத்தில் புறநானூற்றுப் பாடல்கள் பாடப்பட்டுள்ளன. அரசனுடைய செங்கோலும் வெண்கொற்றக் கொடையும் அறத்தின் குறியீடுகளாகப் போற்றப்பட்டன. செங்கோல், ஆட்சி செய்வதற்கான ‘ஆணை இருப்பதை நினைவூட்டுகிறது. தொல்காப்பியம் தெரிவுகொள் செங்கோல் அரசருக்குரியது எனக் குறிப்பிடுகிறது. அறக்கடவுளே மேவி ஆராய்ந்த ஆராய்ச்சினை உடையது.மெலிதலும் நலிதலும் இன்றிக் குடிமக்களைக் காப்பது,அரசின் செல் நெறியைக் குலைக்கும் கொடிய பகையைக் கடிதலும், குடிமக்களின் கலகத்தினைத் தவிர்ப்பதும் ஆகிய பண்புகளில் புறநானூற்றுப் புலவர்கள் தமிழ்மரபினைப் புலமை நலத்துடன் பாடியுள்ளனர்.செங்கோல், நீதியின் அறத்தின் அடையாளமாகத் தொன்றுதொட்டு தமிழ்ப்பண்பாட்டில் உள்ளது.செங்கோல் ஆட்சி செய்யும் மன்னனையே உலகம் போற்றி வணங்கும்.

**திறவுச் சொற்கள்** : அறம், செங்கோல், செங்கோலாட்சி, அறக்கடவுள், பொற்கோல், உண்ணா நோன்பு.

## முன்னுரை

தமிழர் தன் வாழ்வை அகம் புறம் எனப் பிரித்துக்கொண்டனர்.அகவாழ்வு களவு,கற்பு என்னும் காதல் வாழ்வின் அன்பினை எடுத்துரைக்கிறது. புறம் என்பது தமிழரின் வீரம் மற்றும் கொடைச்சிறப்பை எடுத்துரைப்பதாக அமைகிறது. தமிழன் அகவாழ்விலும் புறவாழ்விலும் அறத்தையே கடைபிடித்து வாழ்ந்து வந்தான். அறத்தைக் கடைபிடித்த இந்தப் புறவாழ்வினைப் புறநானூறு நமக்கு வெளிப்படுத்துகிறது.புறநானூறு சங்க கால வீரயுகத்தைக் கண்முன் நிறுத்துகிறது. தமிழ்ப்பண்பாட்டின் திறவுக்கோலாகத் திகழ்கிறது. வேல் எடுத்து களம்புக ஆளில்லா நிலையில் பால்குடிக்கும் பாலகனும் வேல் ஏந்தும் வீரக்கதையை நினைவூட்டுகிறது.தமிழ்,தமிழ்நாடு,தமிழர் பற்றிய செய்திகளைக் குறிப்பிடும் வரலாற்றுச் சான்றாகத் திகழ்கிறது.இத்தகைய சிறப்புமிக்க பண்பாட்டுக் கலைக்களஞ்சியமான புறநானூற்றில் அரசர்களின் அறம் கூறும் கருவியாகிய செங்கோல் திகழ்கிறது. இச்செங்கோல் ஆட்சிமுறை குறித்து ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## அறம்

மனத்திலுள்ள மாசுகளைப் போக்குவதற்கு முயல்வதே அறமாகும்.சுயம் சார்ந்த வாழ்வியலை முன்னெடுத்துச் செல்லும் இக்காலக்கட்டத்திற்கு பிற உயிர்களை நேசிப்பதே அறமாகும்.பிறரோடு இன்சொல் பேசுவது தான் அறமாகும்.பிறர் வாழ்வை மகிழ்வோடு உற்றுநோக்குவது தான் அறமாகும். பொறாமை , பேராசை, வெகுளி, கடுஞ்சொல் ஆகிய மனமாசுகள் இல்லாமல் இருப்பதே அறமாகும்.மனிதன் தனக்கென வரையறுத்துக்கொண்ட ஒழுக்கமுறைகளின் தொகுதியே-முழுநிறைவு வடிவமே அறம் என்று கூறுவர் ( திருநாவுக்கரசு

*க.த, 1977 : பக்.237) தமிழில் 'அறம்' என்ற சொல் தோன்றுவதற்கு முன்பே இதற்கு மாற்றாக, பழமொழி, முதுமொழி, மூதுரை,வாயுறை வாழ்த்து, நன்று, நன்றி,நல்லது, நன்மை, முறை, முறைமை,நயம் , நன்னெறி,நெறி, ஒழுக்கம் , கடமை ஆகிய மாற்றுச் சொற்கள் கையாளப்பட்டு வந்துள்ளன.அறம்,அறன், அறநெறி ,அறவோன் ஆகிய சொற்கள் பயன்பாட்டின் மூலமாக, சங்க இலக்கியங்களில் 'அறம்' என்ற கருத்தாக்கம் பல்வேறு பாடல்களில் பயின்று வருகின்றன.*

## *புறநானூற்றில் அறம்*

*அறம் பற்றிய சொல்லாடல்கள் பல்வேறு பொருண்மைகளில் புறநானூற்றில் வந்துள்ளன. நடுவுநிலைமை , தருமம், அறநூல், நல்வினை, அறக்கடவுள் ஆகிய பொருள்களில் பயின்று வருகின்றன. இச்சொல்லாடல்கள் மன்னன் ,புலவர், குடிமக்கள் ஆகியோரின் பயன்பாட்டுச் சொற்களாய் ,சங்க காலத்தில் வழக்கிலிருந்தன என்பதில் ஐயமில்லை.இச்சொற்கள் மன்னன் அறம் பேசுவதும் புலவர் அறம் பேசுவதும். குடிமக்கள் அறம் பேசுவதுமாக அடிக்கருத்தில் புறநானூற்றுப் பாடல்களில் இடம் பெற்றுள்ளன.*

*வயிலுக்கு அல்லது வேலிக்கு வெளியில் உள்ள ஏழைமக்களுக்குத் தருமம் செய்யும் பொருட்டு கரும்பினைப் பிடுங்கி எறிவோர் உள்ள நாடு எனச் சோழன் நலங்கிள்ளியின் நாட்டின் சிறப்பினை முதுகண்ணன் சாத்தானார் பாடலால் (புறஞ்சிறை மாக்கட்கு அறங்குறித்து-புறம் : 28) அறிய முடிகிறது. உலகம் தலைகீழாக மாறும் காலத்திலும் ஒருவன் செய்த நன்மையினை அழித்தவர் நரகத்தில் அடைவான் என அறம் நூல்கள் உரைக்கின்றன என ஆலத்தூர் கிழார் (நிலம்புடை பெயர்வதாயினும் ஒருவன் செய்தி கொன்றோர்க்கு உய்திஇல்என அறம் பாடிற்றே ஆயிழை கணவ -புறம் :34) பாடியுள்ளார். கெடுதல் இல்லாத மறம் பொருந்திய சோழரின்; உறையூர் அவைக்களத்தில் அறம் நின்று நிலைப்பெற்றுள்ளது.ஆகையினால் முறை செய்தல் என்பது நினக்குப் புகழ் ஆகாது எனக் கிள்ளிவளவனை மாறோக்கத்து நப்பசலையார் (அறம் நின்று நிலையிற்று -புறம் : 39) பாடியுள்ளார். அறம் தங்கும், அறத்தை முழுவதுமாக உணர்ந்த ஒழுக்கம் மாட்சிமைப்பட்ட சான்றோரின் அவைக்களத்தினை உறையூரின் மன்னன், சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவன் பெற்றிருந்தான் எனக் காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக்கண்ணார் (அறந்துஞ்சு உறந்தைப் பொருநனை இவனே-புறம் : 58) பாடியுள்ளார். அதியமான் நெடுமான் அஞ்சி நாட்டில் நல்வினையை விரும்பும் கோட்பாட்டையுடைய நால் வேதங்களையும் அறிந்த அந்தணர் நல்ல தருப்பைப் புல்லைப் பரப்பி,போரில் இறந்த வீரர்களுக்குச் சடங்கினைச் செய்தனரென ஔவையார் (அறம்புரி கொள்கை நான்மறை முதல்வர்-புறம் : 93) பாடியுள்ளார்.*

*பாரியை வெல்வது கடினம் என அறிந்து கொண்ட பகைவர்கள் ,இரவலனாக வேடம் தரித்து வந்து பாரியிடம், தன்னையே கேட்டார்கள். பாரியும் அறவழியைக் கைக்கொண்டு வாரேன் என்று கூறி பகைவர் பின் சென்று கொலையுண்டான் என்ற செய்தியை, கபிலர் பாடல் (அறம்பூண்டு பாரியும் பரிசிலர் இரப்பின் வாரேன் என்னான் அவர்வரை யன்னே-புறம் : 108 ) மூலமாக அறிய முடிகிறது. பேகன் பரிசினைக் கொடுப்பதற்கு முன்னர் ,குறிப்பால் உணர்;ந்த பரணர் நான் உன்னிடம் பசித்து வரவில்லை. நீ அறம் செய்ய வேண்டும் .அதாவது நீ இன்றே போய் உன் அருள்பெறாமல் வருந்தும் அவளின் அரிய துன்பத்தினைப் போக்கவேண்டும் எனக் கூறினார் . இதனை (அறம்செய்தீமோ அருள்வெய் யோய் -புறம் : 145) அருள் விரும்புபவனே, அறத்தைச் செய்வாயாக என்ற பொருளில் பேகனிடத்தில் பரணர் பாடியுள்ளார்.*

*பெருஞ்சித்திரனார்,கூர்மையான வேலையுடைய வள்ளலே என் மனைவியானவள் மிகவும் பசியால் வருந்தியவள், மோர் இல்லாமலும் சோறு இல்லாமலும் கீரையாகிய உணவை உண்பவள், அறக்கடவுளைப் பழித்துக்கொள்பவள் எனத் தனது வறுமை நிலையினைக் குமணனிடம் (அறம்பழி யாத் துவ்வாள்-புறம்:159) கூறுவதாக இப்பாடலடி வெளிக்காட்டுகிறது.இருபத்தொரு வேள்வித் துறைகளையும் குறைவு இல்லாது செய்து முடித்த புகழ் பொருந்திய அறிவுடையோரின் மரபில் வந்தவனே, அறநூல்கள் புகழப்பட்ட யாகபத்தினிகள் நெற்றியில் அணிந்து கொள்வது சாலகம் என்னும் அணியைச் சூடிய (அறம் புகழ்ந்த வலைசூடி-புறம் : 166) மனைவியை உடைய மன்னனே நீ அளவில்லாத வேள்விகள் பல செய்தாய் எனக் கௌணியன் விண்ணந்தாயனை ஆவூர் மூலங்கிழார் பாடியுள்ளார்.*

*அரிய அரண்களைப் போர் செய்து அழித்தலும் பெரிய பாணர் சுற்றத்தைப் பாதுகாத்தலும் அறத்தை நன்கு அறிந்த ஒழுக்கத்தால் சிறந்த அந்தணர்களை (அறம் அறக்கண்ட நெறிமாண்*

*அவையத்து- புறம் : 224) சோழன் கரிகால் பெருவளத்தான் பெற்றிருந்தானெக் கருங்குளவாதனார் பாடியுள்ளார். மறச்செயல்களைச் செய்யும் வீரருக்கும் அறிவுறுத்தும் விதமாக (அறங்குறித்தன்று பொருளா குதலின்- புறம் : 362) புறத்திறையாகிய பொருள் அறநூல்கள் சொல்லும் வழியே ஆற்றுப்படுவதன்று எனச் சிறுவெண்டேரையார் குறிப்பிடுகிறார்.அறுவகைத் தொழில்களையுடைய அந்தணர் நல்வினையை விரும்பி வளர்த்த தீயினைப் போன்ற நாட்டை உடையவனும் வாள் படையினைக் கொண்டு வெற்றியைப் பெற்றவனும் ஆகிய கிள்ளிவளவன் எனக்குப் பரிசில் தந்தான் (அறு தொழில் அந்தணர் அறம்புரிந் தெடுத்த தீ-புறம் : 397) எனக் குறிப்பிடுகிறார்.வளமான பொருளை ஈட்டி பதுக்காமல் பகிர்ந்தளிக்கும் பண்பினை*

> *" நின்நயந்து உறைநர்க்கும் நீநயந்து உறைநர்;க்கும்*
> *புன்மாண் கற்பின் கிளைமுத லோர்க்கும்*
> *--------------------*
> *வல்லாங்கு வாழ்வதும் என்னாது நீயும்*
> *எல்லோர்க்கும் கொடுமதி மனைகிழவோயே" ( புறம் : 163 )*

*என்னும் பாடல் , செல்வத்தை வைத்துக்கொண்டு நன்றாக வாழலாம் என்று எண்ணாமல் நீயும் எல்லோர்க்கும் அளிக்கும் நல்லறத்தைச் செய்வாயாக எனக் குடிமக்களுக்கு அறத்தைப் போதிக்கிறார் பெருஞ்சித்திரனார்.*

## செங்கோல்

*தமிழ்ப்பண்பாட்டில் செங்கோலுக்குத் தனித்த இடமுண்டு. அரசர் முடிசூட்டப்படும் போது அதிகாரத்தினை மாற்றுவதற்கான அடையாளமாகச் செங்கோல் வழங்கப்படும். செங்கோல் நியாயமாக ஆட்சி செய்வதற்கான 'ஆணை' இருப்பதை நினைவூட்டுகிறது.அரசன் செங்கோல் போன்று நேரிய ஆட்சியை மேற்கொள்ள வேண்டும்.அரசனுடைய செங்கோலும் வெண்கொற்றக் கொடையும் அறத்தின் குறியீடுகளாகப் போற்றப்பட்டன. செங்கோல் என்பதற்கு " அரசன், தன் ஆளுகை அரச நீதிப்படி ஆளப்பட்டது என்பதைத் தெரிவிக்கத் தன் கைக்கொண்ட ஒரு கோணுதலிலாத பொற்கோல்" என அபிதான சிந்தாமணி விளக்கம் ( சிங்காரமுதலியார் , 2001 :பக்.726) கூறுகிறது. அரசாட்சி சின்னமான கோல், நல்லரசாட்சி ( ந.சி.கந்தையா , 2009: பக்.291 ) ஆணைநடத்தும் கோல் , நீதி ( ந.கதிரை வேற்பிள்ளை, 2003: பக்.705 ) அரசுச்சின்னம், நல்லரசு,நெருப்புச் சலாகை (புலவர் குழுவினர், 2010 பக் .484 ) என அகராதிகள் விளக்கம் அளிக்கின்றன.*

> *" படையும் கொடியும் குடையும் முரசும்*
> *நடை நவில் புரவியும் களிறும் தேரும்*
> *தாரும் முடியும நேர்வன பிறவும்*
> *தெரிவு கொள் செங்கோல் அரசர்க்கு உரிய" ( தொல் . மரபியல் : 1562)*

*இந்நூற்பாவில் தொல்காப்பியம் செங்கோல் அரசர்க்கு உரிய வெற்றிச்சின்னம் எனக் குறிப்பிடுகிறது."செங்கோல் அரசனின் செந்நெறித்தாய பண்பினை விளக்கிக் கொண்டிருக்கும் ஓர் அடையாளமாகும். இக்கோல் அழகிய செம்மணிகளாலும் இடையிடையே பதிக்கப்பெற்ற பிற நன்மணிகளாலும் அழகு தரும் ஓர் அணி அன்று. செங்கோலில் அறம் அசைந்து கிடக்கின்ற தென்று கூறப்படுகின்றது" ( கரிகாலன்,2011 : பக்.136) அறக்கடவுளே மேவி ஆராய்ந்த ஆராய்ச்சினை உடையது ;மெலிதலும் நலிதலும் இன்றிக் குடிமக்களைக் காப்பது ;அரசின் செல் நெறியைக் குலைக்கும் ; கொடிய பகையைக் கடிதலும் குடிமக்களின் கலகத்தினைத் தவிர்ப்பதும் ஆகிய பண்புகளைச் செங்கோல் கொண்டுள்ளது.*

> *"வான் நோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்*
> *கோல்நோக்கி வாழும் குடி" ( திருக்குறள் : 542)*

*இக்குறட்பாவில் உலகத்திலுள்ள எல்லா உயிர்களின் நல்வாழ்வும் மழையைப் பொறுத்து அமையும்.அதைப்போல ஒரு நாட்டிலுள்ள எல்லாக் குடிமக்களின் நல்வாழ்வும் அந்த மன்னனின் செங்கோன்மையைப் பொறுத்ததாகும் எனத் திருவள்ளுவர் குறிப்பிடுகிறார்.*

## புறநானூற்றில் செங்கோல்

மக்களைக் காப்பாற்றுவதற்வே அரசாட்சி நடைபெற்றது.நாட்டில் நல்லாட்சி நடைபெற்றால் பருவமழை தவறாது பொழியும் என்னும் நம்பிக்கை நிலவியது. நாட்டில் வருவாய் குறைந்தாலும் இயற்கைக்கு மாறான செயற்கைத் தீங்குகள் நேர்ந்தாலும் மக்கள் அரசனையே பழிக்கும் உரிமை பெற்றிருந்தனர்.மக்களின் பழிச்சொல்லுக்காக மன்னன் அஞ்சி நடுங்கினர் .அதனால் தான் அரசன், வாழும் மக்களுக்கு உயிராகக் கருதப்பட்டான். அரசனும் நாட்டினை தன் உயிர்போலக் காத்துவந்தான் எனக் கலித்தொகை (143) குறிப்பிடுகிறது. தன் குட்டியினைக் காக்கும் புலியைப் போல ( புறம் : 106) தன் நாட்டினையும் மக்களையும் பாதுகாத்து வந்தான்.அதோடு மட்டுமல்லாமல் தன் நாட்டு குடிமக்களை நல்ல நடத்தை உடையவர்களாகச் செய்தல் அரசனது கடமையெனக் கருதப்பட்டது.

அரசன் செறிவு, காட்சிக்கு எளிமை, இன்சொல் பேசுதல் ஆகிய பண்புகளை உடையவனாக விளங்கினார் எனப் புறநானூறு (30) குறிப்பிடுகிறது.போருக்கு அஞ்சாமை, கொடை வழங்குதல், தன் மனைவியின் கண்ணீரை விட மக்களின் கண்ணீரைப் பெரிதென மதித்து அரசர்கள் செங்கோலாட்சி செய்தனர்.நிலம் போன்ற பொறுமைக் குணத்தினை அரசர்கள் பெற்றிருந்தனர்.பகை மன்னனின் அறிவிலாப் பிழைகளையும் தம்மை சார்ந்தோரின் தவறுகளையும பொறுத்தல் அரசனின் மாண்பாகும்.

" அம்புதுஞ்சும் கடிஅரணால்
அறம்துஞ்சும் செங்கோலையே " ( புறம் : 20)

சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறையை, அம்புகள் பொருந்திய காவலையுடைய அரணுடன் அறம் தங்கப்பெற்ற செங்கோலை உடையாய் அதாவது நடுவு நிலைமை தவறாமல் உறையும் செங்கோலைப் பெற்றிருப்பவன் என குறுங்கோழியூர் கிழார் பாடியுள்ளார்.

" அறம்புரிந்தன்ன செங்கோல் நாட்டத்து
முறைவேண்டு பொழுதின் பதன் எளியோர் ஈண்டு" ( புறம் : 35)

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனின் இயல்பினை, அறக் கடவுள் போல் செங்கோலால் ஆராய்கின்ற ஆராய்ச்சியையுடைய நீதியைக் கேட்க வேண்டிய காலத்தில் எளியராய் இருந்து கேட்பவர் என வெள்ளைக்குடி நாகனார் பாடியுள்ளார்.சங்க காலத்தில் அரசாட்சி அவர்களின் உயிருள்ள வரையில் நீடித்தது.சிலர் வடக்கிருந்து உயிர் துறந்தனர்.அரசருக்குப் போரில் மானக்கேடு ஏற்படுமானால் அவர்கள் (கோப்பெருஞ்சோழன்,சேரமான் பெருஞ்சேரலாதன் )வடக்கிருந்து , உண்ணாநோன்பு இருந்து உயிரைத் துறந்தனர்.

" புலிபுறங் காக்கும் குருளை போல
மெலிவில் செங்கோல் நீபுறங் காப்பப்" (புறம்: 42)

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் ,புலியானது காக்கும் குட்டியைப்போல குறைவற்ற செங்கோலாட்சியால் நீ நாட்டைக் காக்கின்றாய் என இடைக்காடனார் பாடியுள்ளார்.

" நான்குடன் மாண்ட தாயினும் மாண்ட
அறநெறி முதற்றே அரசின் கொற்றம்
ஆதனால் நமரெனக் கோல்கோ டாது" ( புறம் : 55)

என்னும் பாடலடிகளில் யானைப்படை, குதிரைப்படை , தேர்ப்படை, காலாட்படை என்ற நான்கையும் கொண்ட ஓர் அரசு இருந்தாலும் , அரசனது வெற்றி அவன் கொள்ளும் அறநெறியினை அடிப்படையாகக் கொண்டதாகுமெனவும் ஒருவர் நம்முடையவர் என்று அவர் செய்யும் கொடுந்தொழிலைப் பொறுத்துக் நின் கோல் வளையாது எனவும் மதுரை இளநாகனார் இலவந்திகைப் பள்ளி துஞ்சிய நன்மாறனைப் புகழ்ந்து பாடியுள்ளார்.

"ஆறன் நிலை திரியா அன்பின் அவையத்துத்
திறன்இல் ஒருவனை நாட்டி முறைதிரிந்து
மெலிகோல் செய்தேன் ஆகுக " ( புறம் : 71 )

ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் பகைமன்னனைப் போரில் தோற்கடிப்பபேன் இல்லையென்றால் , அறமானது நிலை கலங்காத அன்பினை உடைய அவையில் அறத்தின் திறம் பொருந்தாத ஒருவனை வைத்து முறை கலங்கிக் கொடுங்கோல் ஆட்சி செய்பவன் நான் ஆகுக எனப் பாடினார்.

*“மனைத்தலை மகவை ஈன்ற அமர்க்கண்*
*கோஒல் செம்மையின் சான்றோர் பல்கிப்*
*பெயல்பிழைப்பு அறியாப் புன்புலத் ததுவே” ( புறம் : 117)*

*என்னும் பாடலடிகளில் பாரியும் அவனது பறம்பு நாட்டின் நிலையும் நன்கு விளக்கப்படுகிறது.பாரி வாழ்ந்த போது அவனது செங்கோன்மையால் பறம்பு நாட்டில் பல தீய நிகழ்வுகள் தோன்றினாலும் மழை தவறாது பெய்யும். நெல் விளையும் ,மலர்கள் மலரும், புல் செழிப்பாய் வளரும், சான்றோர் பலராய் அங்கு வாழ்வார்கள்.அது இன்று அத்தன்மையை இழந்துவிட்டதே எனக் கபிலர் கையறுநிலை பாடுகிறார்.*

*“ அறவோர் புகழ்ந்த ஆய்கோ லன்ன*
*திறவோர் புகழ்ந்த திண்நண் பின்னே” ( புறம் : 221)*

*கோப்பெருஞ்சோழனை, அறத்திறம் உடையவர் புகழ்ந்து கூறும் நீதிநூலுக்கு ஏற்ப ஆராய்ந்து நடத்திய செங்கோலை உடையவன் எனப் பொத்தியார் குறிப்பிட்டுள்ளார்.*

*“ விலங்குபகை கடிந்த கலங்காச் செங்கோல்*
*வையகம் புகழ்நத வயங்குவினை ஒள்வாள்*
*பொய்யா எழினி” ( புறம் : 230)*

*அதியமான் எழினியை, எதிரில் நின்று தடுக்கும் பகையை வென்ற நிலம் கலங்காத செங்கோல் ஆட்சியையும் உலகத்தவர் புகழ்ந்து கூறும் போரைச் செய்யும் ஒளியுடைய வாளையும் தப்பாத சொல்லையுடைய எழினியென அரிசில்கிழார் பாடியுள்ளார். அரசன் குற்றவாளிகளைக் கண்டுபிடித்து கண்ணோட்டமின்றி அவர்களைத் தண்டிக்க வேண்டும்.இவ்வாறு கண்டித்துக் குற்றம் புரியாமல் காப்பாற்றுவது அரசனின் கடமையாகும்.செங்கோல் மன்னனது கடமையாகுமெனத் திருக்குறள் கூறுவதை, புறநானூற்றுப் பாடலும் (29) உறுதிச்செய்கிறது.*

*“ நெல்லும் உயிர் அன்றே நீரும் உயிர் அன்றே*
*மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்” ( புறம்: 186)*

*பரந்த இவ்வுலகம் மன்னன் என்ற உயிரை உடையதெனக் மோசிகீரனார் பாடியுள்ளார். தொண்டைமான் இளந்திரையன் சகடம் செலுத்துவோன் போல நன்னெறிக்கண் தன் நாட்டைச் செலுத்த வேண்டுமென மன்னர்களுக்கு அறிவுரை வழங்கியதைப் புறநானூற்று பாடல் ( 185)விளக்குகிறது.அரசனுக்குத் துணையாக ஆட்சி செய்து வந்தவர்கள் “வேந்துதொழில் அயரும் அருந்தலைச் சுற்றம்” ( புறம் : 285) எனக் குறிப்பிட்டுள்ளனர்.“வரப்புயர நீருயரும் ஃநீருயர நெல் உயரும் ஃநெல்லுயரக் குடி உயரும் ஃகுடி உயரக் கோல் உயரும்ஃகோல் உயரக் கோன் உயர்வான்” என்ற ஔவையாரின் அமுதமொழிகளுக்குகேற்ப மக்களுடைய பசியை நீக்கி ஆட்சி செய்யும் மன்னனே சிறந்த செங்கோலாட்சியாளன் ஆவான்.உலகில் நிலைத்து நிற்பது அறத்தினால் வருகின்ற புகழ் மட்டுமேயாகும். செல்வமோ, உடலோ, இளமையோ ஆகிய எதுவுமே நிலைக்காது என்பதனை,*

*“இழைகிளர் நெடுந்தேர் இரவலர்க்கு அருகாது*
*கொள்என விடுவை யாயின் வெள்வெளன*
*ஆண்டுநீ பெயர்த்த பின்னும்*
*ஈண்டுநீடு விளங்கும் நீ எய்திய புகழே” ( புறம் : 359)*

*இப்பாடல் நிலையாமை வலியுறுத்தி, நிலைபேறானவற்றை மன்னன் செய்ய வேண்டுமெனக் குறிப்பிடுகிறது.பெரிய நாடுகளை வென்ற மன்னரும் இறுதியில் சுடுகாட்டை அடைவது உறுதியாகும்.இந்த உலகத்தில் நீ செய்யும் பழியும் நிலைக்கும் . புகழும் நிலைக்கும் அதனால் பழியை நீக்கி புகழை நிறுவி அறமே உரைத்து ஆட்சிசெய்வாயாக எனக் காவிட்டனார் கீரன் அறிவுறுத்துகிறார்.*

## தொகுப்புரை

*தமிழ் மன்னர்கள் செங்கோலாட்சியை நடத்தினார்கள் எனப் புறநானூறு சான்று பகிர்கிறது.நேர்மையான ஆட்சியாளர்களின் குறியீடாகச் செங்கோலை வைத்தனர்.தொல்காப்பியம் தெரிவுகொள் செங்கோல் அரசருக்குரியது எனக் குறிப்பிடுகிறது.செங்கோல் நீதியின் , அறத்தின் அடையாளமாகத் தொன்றுதொட்டு தமிழ்மரபில் உள்ளது.செங்கோல் செலுத்தும் மன்னனையே உலகம் போற்றி வணங்கும். உலகில் நிலைத்து நிற்பது அறத்தினால் வருகின்ற புகழ் மட்டுமேயாகும்.செங்கோல் ஏந்திய அரசன் என்ற*

*புகழுரைக்கு அறமே எனப் புறநானூற்றுப் பாடல்களிலிருந்து ஆய்வுத்தெளிவினைப் பெறமுடிகிறது.*

### பார்வை நுற்கள்

*1.கந்தையா ந.சி – செந்தமிழ் அகராதி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை-600013. பதிப்பு 2009.*

*2.கதிரை வேற்பிள்ளை.நா- தமிழ்மொழி அகராதி, சாரதா பதிப்பகம், இராயப்பேட்டை, சென்னை-600014, முதற்பதிப்பு 2003.*

*3.கரிகாலன் ( தொ.ஆ) -புறநானூற்றுச் சொற்பொழிவுகள்-தோழமை வெளியீடு, கே.கே.நகர் சென்னை-60078, முதற்பதிப்பு 2011.*

*4.சிங்காரவேலு முதலியார்.ஆ - சாரதா பதிப்பகம், இராயப்பேட்டை, சென்னை-600014, முதற்பதிப்பு 2001.*

*5.திருநாவுக்கரசு, க.த – திருக்குறள் நீதி இலக்கியம், சென்னைப் பல்கலைக்கழம், சென்னை, பதிப்பு 1977.*

*6.நாமக்கல் கவிஞர் ( உ.ஆ) - திருக்குறள், சாரதா பதிப்பகம் , இராயப்பேட்டை, சென்னை-600014 , 24 - ஆம் பதிப்பு 2014.*

*7.பாலசுப்பிரமணியன் கு.வெ ( உ.ஆ) புறநானூறு மூலமும் உரையும் - நியூசெஞ்சுரி புக் :வுஸ், அம்பத்தூர், சென்னை-600098 மூன்றாம் பதிப்பு 2007.*

*8.பாலசுப்பிரமணியன் கு.வெ ( உ.ஆ) கலித்தொகை மூலமும் உரையும் - நியூசெஞ்சுரி புக் :வுஸ், அம்பத்தூர், சென்னை-600098 மூன்றாம் பதிப்பு 2007.*

*9.பாலசுப்பிரமணியன் கு.வெ- சங்க இலக்கியத்தில் புறப்பொருள், மெய்யப்பன் பதிப்பகம், 53, புதுத்தெரு, சிதம்பரம்-608001, முதற் பதிப்பு 2007.*

*10.மாணிக்கவாசகன் .ஞா- தொல்காப்பியம மூலமும் விளக்க உரையும் , உமா பதிப்பகம், மண்ணடி, சென்னை-600001, ஐந்தாம் பதிப்பு 2017.*

********* ********* ********** ********* ********* ********** ********** **********